**சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08**

ந.க.எண். 348/அ6/2023 நாள். .02.2023

பொருள் பள்ளிக் கல்வி - 2022-2023 ஆம் கல்வியாண்டில் கல்வி இணை/கல்வி சாரா மன்ற செயல்பாடுகள் - சிறார் திரைப்படங்கள் திரையிடுதல், வினாடிவினா, இலக்கிய மன்றம் மற்றும் வானவில் மன்றம் - போட்டிகள் நடத்துதல் - பின்பற்ற விதிமுறைகள் -மற்றும் இணையதளத்தில் பதிவேற்றம் - செய்தல் தொடர்பாக.

பார்வை தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண். 019528/எம்/இ1/2022 நாள். 10.01.2023 மற்றும் 06.02.2023

………………

தமிழ்நாடு சட்டப்பேரவையில் 2022-23 ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே கல்வி இணைச் செயல்பாடுகளை ஊக்குவிக்க வெவ்வேறு காலகட்டங்களில் இலக்கியம், கவின்கலை, சூழலியல் உள்ளிட்ட மாணவர் மன்றங்கள் தொடங்கப்பட்டு நடைமுறையில் இருந்தன. கொரோனா பெருந்தொற்றினால் கடந்த சில ஆண்டுகள் இம்மன்றங்கள் செயல்படாத நிலையில் உள்ளதை தற்போது புதுப்பித்து சிறப்பாக செயல்பட வழி செய்யப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்.

2022-2023 ஆம் கல்வியாண்டில் அனைத்து அரசு/ சென்னை மற்றும் தொடக்க/ நடுநிலை/உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் ஒவ்வொரு வாரமும் நடைபெறும் மன்றச் செயல்பாடுகளில் 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களும் ஆர்வத்துடன் பங்கேற்கும் நோக்கத்துடன் பார்வையில் காணும் செயல்முறைகளின்படி இலக்கிய மன்றம், வினாடி வினா மன்றம், சிறார் திரைப்படங்கள் திரையிடுதல் மற்றும் வானவில் மன்றம் போன்றவற்றை ஒவ்வொரு பள்ளியிலும் நிறுவி ஒவ்வொரு மாதமும் நிகழ்ச்சிகளும் போட்டிகளும் நடத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சென்னை மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு நடுநிலை/உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் பின்வரும் அட்டவணையின்படி போட்டிகள் நடத்தப்பட உள்ளது.

**பள்ளியளவில் போட்டிகள் நடைபெறும் நாட்கள்**

| நாள் | போட்டியின் பெயர் | மாணவர்கள்/ குழுக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 10.02.2023 முதல் 13.02.2023 | இலக்கிய மன்றம் | 2 குழுக்கள் (2 மாணவர்கள் அல்லது 2 மாணவிகள்) |
| 14.02.2023 முதல் 17.02.2023 | சிறார் திரைப்படங்கள் | மாணவர்கள் எண்ணிக்கை 4 |
| 20.02.2023 முதல் 22.02.2023 | வினாடி வினா | 2 குழுக்கள் (2 மாணவர்கள் அல்லது 2 மாணவிகள்) |
| பிப்ரவரி மாதம் முழுவதும் | வானவில் மன்றம் | 4 மாணவர்கள் |

Scanned with OKEN Scanner

**வட்டார அளவில் போட்டி நடைபெறும் நாட்கள்**

| நாள் | போட்டியின் பெயர் | வட சென்னை கல்வி மாவட்டம் போட்டிகள் நடைபெறும் இடம் | தென் சென்னை கல்வி மாவட்டம் போட்டிகள் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 16.02.2023 | இலக்கிய மன்றம் | கேரள வித்யாலயா மேல்நிலைப் பள்ளி, பூந்தமல்லி ஹைரோடு, சென்னை | ஸ்ரீ ராமகிருஷ்ணா சாரதா வித்யாலயா மகளிர் மேல்நிலைப் பள்ளி, உஸ்மான் ரோடு, திநகர், சென்னை-17. |
| 22.02.2023 | சிறார் திரைப்படங்கள் | | |
| 01.03.2023 | வினாடி வினா | பெண்டிக் மகளிர் மேல்நிலைப் பள்ளி, வேப்பேரி, சென்னை-07 | சி.எஸ்.ஐ மோனகன் மகளிர் மேல்நிலைப் பள்ளி, மயிலாப்பூர், சென்னை-04 |
| 08.03.2023 | வானவில் மன்றம் | | |

பள்ளி அளவில் மற்றும் வட்டார அளவில் வெற்றி பெற்ற மாணவர்களின் விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள இணையதள விரைவு நூலங்கம் (QR code) பயன்படுத்தி பதிவேற்றம் செய்யப்படுவதை உறுதி செய்யுமாறு சார்ந்த பள்ளித் துணை ஆய்வாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிகளின் விவரம்**

| நாள் | போட்டியின் பெயர் | போட்டிகள் நடைபெறும் நேரம் | போட்டிகள் நடைபெறும் மையம் |
|---|---|---|---|
| 21.02.2023 | இலக்கிய மன்றம் | காலை 10.00 மணி | முதன்மைக் கல்வி அலுவலகம், எழும்பூர், சென்னை-08. |
| 28.02.2023 | சிறார் திரைப்படங்கள் | காலை 10.00 மணி | |
| 07.03.2023 | வினாடி வினா | காலை 10.00 மணி | |
| 14.03.2023 | வானவில் மன்றம் | மதியம் 2.00 மணி | |

மேற்காண் போட்டிகள் பள்ளி அளவில் மற்றும் வட்டார அளவில் நடத்தி முடிக்க தலைமையாசிரயர் மற்றும் பள்ளித் துணை ஆய்வாளருக்கு அறிவுறுத்துமாறு மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை) வட சென்னை மற்றும் தென் சென்னை மற்றும் மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு. பார்வையில் காண் செயல்முறை கடிதம்

9.2.23

**முதன்மைக்கல்வி அலுவலர்**

9/2/2023 **சென்னை**

பெறுநர்

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை) வடசென்னை மற்றும் தென் சென்னை
2. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) சென்னை

நகல்

மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிகளுக்கு பொறுப்பு அலுவலராக முதன்மைக் கல்வி அலுவலக பள்ளித் துணை ஆய்வாளர் பொறுப்பேற்று கொண்டு போட்டிகளை சிறப்பான முறையில் நடத்திடும் பொருட்டு நகல் அனுப்பப்படுகிறது

Scanned with OKEN Scanner